# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம் : 05 கணை : 32 டிசம்பர் – 2024



Since : 2020 May 18

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# குருசேத்திரம்
சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...


**பிரதம ஆசிரியர்**

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு. ம.நிரேஸ்குமார்

திரு. நா.அம்பிகைபாகன்

திரு. ஞா.கயூரன்

**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு, யாழ்ப்பாணம்.



**தொடர்புகளுக்கு**

guruseththiram@gmail.com



குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக்கூறக் கடப்பாடுடையவர்கள்!


## உள்ளே...


| | |
|---|---|
| காட்சியும் கருத்தும் | 1 |
| ஆசிரியர் பார்வையில், | 2 |
| முறைமை மாற்றம் (System Change) | 3 |
| ஆசிரியர்களின் குரல்களுக்கு மதிப்பளித்து புதிய சமூக ஒப்பந்தத்தை உருவாக்குவோம். | 4 |
| "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 23 | 7 |
| தாய் தந்தை பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது இதுதான் | 7 |
| வீரன் | 8 |
| மாற்றம் | 8 |
| ஏழ்மை – தாய் – அவள் | 8 |
| சமூக ஊடகங்களும் மனநலமும் | 9 |
| மனவெழுச்சிசார் நுண்ணறிவும் கல்வியும் | 10 |
| யார் ராஜா? | 12 |
| எண்மக் கற்றல் (Digital Learning) | 13 |
| உன்னையே நீ அறிவாய் | 15 |
| தன் வினை தன்னைச்சுடும்... | 16 |
| பேசும் படங்கள் | 17 |

# காட்சியும் கருத்தும்

கலாநிதி சு.பரமானந்தம்










## கல்வி .....

கல்வி என்பது கற்றல் மற்றும் அறிவு, திறன்கள், மனப்பாங்கு, விழுமியங்கள் மற்றும் புரிதலைப் பெறுவதற்கான ஒரு பரந்த நிரந்தர நடத்தை மாற்றத்திற்கான செயல்முறையாகும்

# ஆசிரியர் பார்வையில்,

குருசேத்திரம் இதழிற்கு பிரதம ஆசிரியராக தலையங்கம் எழுதுவதில் மகிழ்வடைகின்றேன். எமது நாட்டில் பல்வேறு மாற்றங்கள் நடைபெற்று வரும் இச்சந்தர்ப்பத்தில் மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் பல வாதப்பிரதிவாதங் களுக்கு உட்பட்டு வருகின்றார்கள். தமிழர்களின் கல்வியினூடான இருப்பைப் படிப்படியாக இழந்துவரும் நிலையில் கல்விக்கான பல சாதனைகளை நிலைநாட்டியிருந்த எமது சமூகம் இன்று அரசியல் கெடுபிடிகளுக்குள் சிக்குண்டு, இருக்கின்ற எமது பலங்களையும் பலவீனமாக்கி வருகின்றோம்.




நடைபெற்று முடிந்த ஜனாதிப தித் தேர்தலில் ஏற்பட்ட மாற்றம் ஒரு விசித்திரமான மனப்போக்கை மக்களிடையே ஏற்படுத்தியிருப் பதைக் காணலாம். குறிப்பாக இனவாதம் பேசி வெல்ல முடியாது என்ற சிந்தனை இளம் சமூகத்தின ரிடையே ஏற்பட்டுவரும் மாற்றமாக கருதலாம்.

இந்நிலையில் பாரளுமன்றத் தேர்தல் தமிழ்பேசும் மக்களி டையே பல பிளவுகளை ஏற்படுத்திவருகின்றது. ஊழலற்ற தலை மைத்துவத்தை தேடி அலைவது போல் பலர் போட்டியிட முன்வந்திருக்கின்றார்கள். பொருத்தமான தலைவர்களைத் தேட வேண்டிய நிலையில் மக்கள் முடிவெடுப்பதில் தடுமாறுகின்ற நிலை. இதனால் யாரும் எதிர்பாராதவர்கள் பாரளுமன்றிற்கு தெரிவாகக்கூடிய நிலை ஏற்பட்டது.

எமது தமிழர் கல்வியில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பலவேறு இருந்தாலும் எமது கல்வியை தக்கவைக்கும் அதே வேளை மேம்படுத்தவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கல்வி மீதான அக்கறை முயற்சிகள் கிராம மட்டங்களில் இருந்து வலுப்படுத்த வேண்டும். எமது கல்விக்கான உள்ளீடுகள் புலம்பெயர்தேசங்களில் இருந்து கிடைக்கப்பெற்றாலும் அவை பிரசித்திபெற்ற அல்லது நகரப் பாடசாலைகளிலேயே அதிகம் குவிக்கப்படுகின்றமையை அவதா னிக்கக்கூடியதாக உள்ளது. அது பௌதீக வளக்கட்டமைப்பில் இடைவெளியை அதிகரிக்கச் செய்வதக் காணக்கூடியதாக அமைகின்றது. இந்த இடைவெளியைக் குறைப்பதாயின், கிராமிய மட்டங்களில் பாடசாலைகளின் அடிப்படை பௌதீக வளத் தேவைகளை அதிகரிக்கச் செய்வதற்கான முன்னெடுப்புக்களை புலம்பெயர் அமைப்புக்கள் முன்னெடுக்கும் அதேவேளை கிராமிய மட்ட, சுயபொருளாதாரத் திட்டங்களை ஊக்குவிப்பதற்கான முனைப்புக்களை முன்னெடுக்கவேண்டும்.


மாற்றங்களை கொண்டுவருவதனை நோக்காகக்கொண்டு போட்டியிட்டவர்கள் முதலில் அந்த மாற்றங்களை தம்மில் ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் சுமார் 10 ஆயிரம் வேட்பாளர் களாவது ஊழலற்றவர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. சுய பொருளாதார மேம்பாடு ஊழலற்ற செயற்பாடுகளை போசிக்கின்ற செயற்பாடுகளாக அமையுமென் பதை அனைவரும் கவனத்திலெடுக்க வேண்டும்.

சாத்தியமாகுமா, சவால்களை சாத்தியமாக்குவதே தமிழர் பண்பு. விளைவுகளின் மீது விமர்சனங்களை பொழிவதை தவிர்த்து நேர்மறை விளைவுகளிற்கும், வளமான எதிர்காலத்திற்காக கல்வியை கருவியாக்குவோம்.

நன்றி
என்றும் அன்புடன்,
**கலாநிதி.சு.பரமானந்தம்.**

# முறைமை மாற்றம் (System Change)

- கலாநிதி சு.பரமானந்தம் -




முறைமை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட முறைமையின் கட்டமைப்புகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளில் ஒரு அடிப்படை மாற்றத்தைக் குறிக்கிறது. அது சமூக, பொருளாதார, அரசியல் அல்லது சுற்றுச்சூழல். இந்த மாற்றம் பெரும்பாலும் அடிப்படைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, விளைவுகளை மேம்படுத்துவதற்கு அல்லது நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு எப்படிச் செயல்படுகின்றன என்பதை மறுபரிசீலனை செய்வதையும் மீள் வடிவமைப்பதையும் குறித்து நிற்கின்றது.

சமூக இயக்கங்களின் சூழமைவில், முறைமை மாற்றம் என்பது சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு வாதிடுவதன் மூலம் முறையான ஏற்றத்தாழ்வுகள் அல்லது அநீதிகளைச் சமாளிப்பதை அல்லது இல்லாமல் செய்வதை நோக்கமாகக் கொள்ளலாம். சமூகச் சூழமைவில், இது காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு நிலையான நடைமுறைகள் மற்றும் புதுப்பிக் கத்தக்க எரிசக்தி முறைமைகளை நோக்கி மாற்றங்களையும் உள்ளடக்கிய நிலைபேண்தகு அபிவிருத்திக்கான செயலுபாயங்க ளையும் கொண்டிருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, "முறைமை மாற்றம்" என்பது சரிசெய்தல் களில் இருந்து விலகி, நீடித்த நிலைபேண் விளைவுகளை உருவாக்கும் அல்லது நிலைமாற்றும் தீர்வுகளை நோக்கிச் செல்வதாகும்.

அரசியல் மற்றும் நிர்வாகத்தில், முறைமை மாற்றம் என்பது ஆளுமை எவ்வாறு செயல்படுகிறது என்பதில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் குறிக்கிறது, பெரும்பாலும் செயல்திறன், வெளிப் படைத்தன்மை, பொறுப்புக்கூறல் அல்லது உள்ளடக்கத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இதில் பின்வருவன அடங்கும்:

**கொள்கைச் சீர்திருத்தம்:** சமூகப் பிரச்சினைகளை மிகவும் திறம்பட எதிர்கொள்ள புதிய சட்டங்களைச் செயல்படுத்துதல் அல்லது ஏற்கனவே உள்ளவற்றைத் திருத்துதல்.

**நிர்வாக மறுசீரமைப்பு:** சேவை வழங்கல் மற்றும் பதிலளிக்கும் தன்மையை மேம்படுத்த அரசு நிறுவனங்களின் நிறுவன கட்டமைப்பை மாற்றுதல்.

**அதிகாரப் பரவலாக்கம்:** அதிகாரம் மற்றும் முடிவெடுப்பதை மத்திய அதிகாரிகளிடமிருந்து உள்ளூர் அரசாங்கங்கள் அல்லது

சமூகங்களுக்கு மாற்றுதல், அதிக பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் தேவைகளுக்கு தீர்வுகளை தேவையான சந்தர்ப்பங்களில் உருவாக்குதல்.

**எண்மிய மயமாக்கல்:** அணுகல், செயல்திறன் மற்றும் மக்களின் ஈடுபாட்டை மேம்படுத்த, நிர்வாக செயல்முறைகளில் தொழில் நுட்பத்தை ஒருங்கிணைத்தல்.

**பங்கேற்பு முகாமை**: பொது ஆலோசனைகள், மக்கள் கூட்டங்கள் அல்லது பங்கேற்பு வரவு செலவுத் திட்டம் போன்ற முடிவெடுக்கும் செயல்முறைகளில் நாட்டு மக்களை நேரடியாக ஈடுபடுத்துதல்.

**நிறுவன மாற்றம்:** ஸ்திரத்தன்மை, நேர்மை மற்றும் பிரதி நிதித்துவத்தை மேம்படுத்த அரசியல் நிறுவனங்களின் கட்டமைப் புகள் மற்றும் செயல்முறைகளில் சீர்திருத்தம்.

**சட்டத்தின் ஆட்சி:** ஒரு பன்முக கலாசார, மொழிகளைப் பின்னணி யைக் கொண்ட மக்கள் வாழும் நாட்டில் எல்லோரும் சட்டத்தின் முன் சமன் என்ற நிலையை உறுதிப்படுத்துதல்

நிறைவாக, இன்றைய சூழமைவில் முறைமை மாற்றம் மிகவும் பயனுள்ள மற்றும் நியாயமான அரசியல் நிலப்பரப்பை உருவாக்க முயல்கிறது, பெரும்பாலும் அதிக பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்வுக்கான செயலாற்றுகை உந்துசக்தியை முறைமை மாற்றம் வலியுறுத்துகின்றது.

*சம காலத்தில் எல்லோரினாலும் கருத்தாடப்படும் ''முறைமை மாற்றம்'' தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடுவோம். குருசேத்திரத்திற்கான மகுட வாக்கியமான ''சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...'' என்பதை ஒவ்வொருவரும் மனங்கொள்வோம்.*

# ஆசிரியர்களின் குரல்களுக்கு மதிப்பளித்து புதிய சமூக ஒப்பந்தத்தை உருவாக்குவோம்.



*சி.லோகராஜா*
*விரிவுரையாளர்,*
*மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி*

## அறிமுகம்

உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் 1994ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் பண்பாட்டு நிறுவனமானது (UNESCO) 1994 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதியன்று, அந்த நாளை உலக ஆசிரியர் தினமாக பிரகடனப் படுத்தியது, ஆசிரியர்களின் நிலை தொடர்பாக 1966ஆம் ஆண்டு, சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பின் (யுனெஸ்கோ) பரிந்து ரையை ஏற்றுக்கொண்ட ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் மேற்குறித்த நாள் யுனெஸ்கோவினால் உலக ஆசிரியர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். யுனெஸ்கோவின் பரிந்துரைகள் ஆசிரியர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அவர்களின் முன்பயிற்சி, மேற்படிப்பு, ஆட்சேர்ப்பு, வேலைவாய்ப்பு மற்றும் கற்பித்தல் மற்றும் கற்றல் நிலைமைகளுக்கான தரநிலைகள் பற்றிய அளவுகோல்களை அமைக்க உதவியது.

இலங்கையில் ஆசிரியர் சேவை 1994 ஒக்டோபர் 06 திகதி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் நினைவாக வருடமும் ஒக்டோபர் 06 ஆம் திகதியே ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. இது

நமது வாழ்க்கையில் ஆசிரியர்களின் பங்களிப்பைக் நினைவு கூரவும், கௌரவிக்கவும் ஏற்படுத்தப்பட்ட சிறப்பு நாளாகும். ஆசிரியர் தினத்தன்று, மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறார்கள்.


### ஆசிரியர் தினம் ஏன் கொண்டாடப்பட வேண்டும்

உலகெங்கிலும் உள்ள ஆசிரியர்கள் இன்றுவரை பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் குறைந்த ஊதியம், மோசமான பணி நிலைமைகள், தரமான கல்வி இல்லாமை என இந்த பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. ஆசிரியர் தினம் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் கவனம் செலுத்துகிறது மற்றும்

ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் மாணவர்களின் வாழ்க்கையில் நிலைமாற்றத்தையும், நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். மாணவர்களின் வாழ்க்கையில் தனிப்பட்ட நிறைவை வழங்கு வதற்கும் ஆசிரியர்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகும். இவ்வாறு மாணவர்களிடையே நம் வாழ்வில் ஆசிரியர்கள் வகிக்கும் பங்கின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, ஆசிரியர்கள் கற்பவர்களின் வாழ்க்கையை வடிவமைப்பதில் எவ்வாறு உதவினார்கள் என்பதை சீர்தூக்கிப் பார்க்கும் ஒரு நாளாகவும், அதற்காக மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் நாளாகவும் ஆசிரியர் தினம் அமைந்திருக்கின்றது.

### 2024 உலக ஆசிரியர் தினத்தின் கருப்பொருள்

2024ஆம் ஆண்டின் உலக ஆசிரியர் தினத்துக்கான கருப்பொருள், “கல்விக்கான புதிய சமூக ஒப்பந்தத்தை நோக்கி ஆசிரியர்களின் குரல்களுக்கு மதிப்பளித்தல்” என்பதாகும். இக் கருப்பொருளானது - ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் மற்றும் தொழிலை மாற்றுதல் எனும் யுனெஸ்கோவின் கல்விக்கான சர்வதேச ஆசிரியர் பணிக்குழுவின் 2024 ஆண்டு அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும். இது எதிர்காலத்தைப் கருத்திற்கொண்டு கல்விக்கான புதிய சமூக ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கும், ஆசிரியர் தொழிலின் கௌரவத்தையும் கவர்ச்சியையும், உயர்த்துவதற்கும், உலகளாவிய குறைபாடுகள் மற்றும் பற்றாக்குறைகளைக் குறைப்பதற்கும் உதவும்.”




இக் கருப்பொருளானது கல்வி சீர்திருத்தம் மற்றும் ஆசிரியர் களை எதிர்கொள்ளும் சவால்களை முறையாக எதிர்கொள்வதில் இருக்கும் உரையாடலின் அவசியத்தை வலியுறுத்துகிறது. ஆசிரியர்களின் பற்றாக்குறையை குறைத்து, உலக அளவில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இந்த தினத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்று யுனெஸ்கோ வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைப்புகள், சமூகங்கள், மற்றும் குடும்பங்கள் ஆசிரியர்களை எவ்வாறு அங்கீகரிக்கின்றன, பாராட்டுகின்றன மற்றும் தீவிரமாக ஆதரிக்கின்றன என்பதையும் இந்த ஆண்டுக் கான ஆசிரியர் தின நிகழ்வுகள் ஆராயும். உலகில் மோதல் களால் பாதிக்கப்பட்ட குறிப்பாக மத்திய கிழக்கில் காசா, சூடான், ஏமன் மற்றும் லெபனான் போன்ற பகுதிகளில் வன்முறை மற்றும் உறுதியற்ற தன்மையால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் கடுமையான சவால்களை முன்னிலைப்படுத் துவதும் அவசியமாகின்றது. இப்பகுதிகளிலுள்ள உள்ள மில்லியன் கணக்கான குழந்தைகள் கல்வி பெறும் உரிமையை உறுதிப்படுத் துவதையும் 2024ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தினம் நோக்க மாகக் கொண்டுள்ளது.

யுனெஸ்கோவின் ஆசிரியர் பணிக்குழுவின் உலகளாவிய அறிக்கை, ஆசிரியர் தொழில் நெருக்கடியில் இருப்பதாகத் தெளிவாகக் கூறுகிறது, இன்று ஆசிரியர்களுக்கான சமூக அங்கீகாரம் குறைந்துள்ளது. இது பற்றாக்குறையை அதிகரிக் கிறது மற்றும் ஒரு தொழிலாக ஆசிரியர் மீதான ஈர்ப்பை ஒட்டுமொத்தமாக இழக்கச்செய்கின்றது. இன்றைய கல்வி முறைகள் ஒரு குறுக்கு வழியில் உள்ளன, இது உலகளவில் கற்றல் மற்றும் கற்பித்தலின் எதிர்காலத்தை அச்சுறுத்தும் முன்னோடியில்லாத சவால்களை எதிர்கொள்கிறது, இதில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை, மோசமான பணி நிலைமைகள் மற்றும் தொழிலில் நம்பிக்கையின்மை, குறைந்த ஊதியம், அதிகப்படியான பணிச்சுமை, குறைக்கப்பட்ட சுயாட்சி மற்றும் போதிய வளங்கள் இல்லாமை, திறமையான நபர்களை தொழிலில் இருந்து விலகுதல், என இந்த பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இந்தச் சவால்கள் மில்லியன் கணக்கான மாணவர்களின் கல்வியின் தரம் மற்றும் மாணவர் சேர்க்கையை ஆபத்தில் ஆழ்த்துகிறது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 4க்கு இணங்க, ஆசிரியர்களின் சமூக நிலைப்பாட்டை மீட்டெடுப்பதற்கும், உலகளவில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தொழில் வல்லுநர்களாக அவர்களின் பங்கை அங்கீகரிப்பதும், மதிப்பதும் இன்றியமையாததாகும். “நிலைமாற்றும் புத்தி ஜீவிகள் மற்றும் சமூகத் தலைவர்களாக ஆசிரியர்கள் தங்கள் பாத்திரங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் அளிப்பதன் மூலம், பொது நலனுக்காக சேவை செய்யவும், நெகிழ்ச்சியான மற்றும் சமமான கல்வி முறைகளை வடிவமைக்கவும் முடியும். குறிப்பாக கல்விக்கான புதிய சமூக ஒப்பந்தத்தை நாம் ஒருவாக்க முடியும். இந்த புதிய சமூக ஒப்பந்தத்தில் ஆசிரியர்களை ஆக்கப்பூர்வமான புத்தி ஜீவிகள் மற்றும் புதுமையான தொழில் வல்லுநர்கள் என்று அங்கீகரிப்பதன் மூலம், அவர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, பயனுள்ள கல்வி நடைமுறைகளை வடிவமைக்க அவர்களின் நுண்ணறிவைப் பயன்படுத்த முடியும்.

இறுதியாக, கல்விக் கொள்கை முடிவுகளில், கல்வி மறுசீரமைப்புக்களில் ஆசிரியர்களின் குரல்களுக்கு முன்னுரிமை அளிப்பது கூட்டு அணுகுமுறையை வளர்க்கிறது, சமூக மாற்றம் மற்றும் சமூக வளர்ச்சியின் முகவர்களாக பங்களிக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. பங்கேற்பு ஜனநாயகத்தை ஊக்குவிக்கிறது, பாட சாலைகளுக்குள் உரையாடல் மற்றும் ஈடுபாட்டின் கலாச்சாரத்தை வளர்க்கின்றது. இது எதிர்கால ஜனநாயகக் குடிமக்களை வடிவமைப்பதில் முக்கியமானது. ஆசிரியர்கள் தனிநபர்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, சமூகத்தின் எதிர்காலத்தையும் வடிவமைப்பதில் ஆசிரியர்கள் வகிக்கும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். எனவே புதிய சமூக ஒப்பந்தத்தை நோக்கி ஆசிரியர்களின் குரல்களுக்கு மதிப்பளித்து நன்றி கூறி நாமும் ஆசிரியர்களைக் கொண்டாடுவோம்.

# "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 23

## கதைகளால் நியமாகி...

### தாய் தந்தை பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது இதுதான்




முதியவர் ஒருவர் ஒரு வழக்கு தொடர்ந்தார். நீதிபதி அவரை யாருக்கு எதிராக வழக்குத் தொடர்கிறீர்கள் என்று கேட்க, "எனது மகளுக்கு எதிராக" என்றார். நீதிபதி ஆச்சரியப்பட்டார். அவர் பெயரையும் அவர் இருக்கும் இடத்தையும் கேட்டு அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. மகள் நீதிமன்றத்தில் ஆயரானாள். "இவர் யார் என்று தெரிகிறதா?" என்று நீதிபதி கேட்டார். "இவர் என் தந்தை என்று மகள் கூறினாள்." "உங்கள் தந்தை உங்களிடம் உங்கள் வருமானம் எவ்வளவு குறைவாக இருந்தாலும் தனக்கு மாதாந்தம் பணம் தர வேண்டும் என்று கேட்கிறார்." என்று நீதிபதி கூறினார்.

"அவர்கள் பெரும் பணக்காரர் அவருக்கு பணம் நான் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாள்." மகள். "தந்தை மகளிடம் உதவி கேட்பது நியாயமான கோரிக்கை அதை கேட்கும் உரிமை அவருக்கு உண்டு. அவர் கேட்கும் ஒரு ரூபாவை மாதம் மாதம் நீங்கள் நேரடியாக சென்று அவரது கையில் கொடுக்க வேண்டும்" என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

நீதிபதி அந்த முதியவரை பார்த்து, "நீங்கள் பெரிய பணக்காரராக இருந்தும் வெறும் ஏன் ஒரு ரூபாவை மட்டும் தரும்படி கேட்டீர்கள்?" என்று கேட்டார்.

"நீதிபதி அவர்களே, என் மகளிடம் அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறேன். அவள் வேலையில் மும்முறமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதால் தொலைபேசியில் அவளுடன் பேச பலமுறை முயன்றாலும் அவளுடன் பேச முடிவதில்லை. அவளை பார்க்கலாம் என்றால் அங்கு சென்றாலும் அவளை பார்க்க முடிவதில்லை. இங்கு என்னை பார்க்கவும் அவள் வருவதில்லை. மாதம் ஒரு முறையாவது அவள் வந்து என்னை பார்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கை தொடர்ந்தேன்" என்றார்.

நீதிபதியும் அவையில் உள்ளவர்களும் கண் கலங்கி போயிருந்தார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதை காலம் கடந்து போகும் முன் அறிந்து கொள்ளுங்கள். புரிந்து கொள்ளுங்கள். அரவணைத்துக் கொள்ளுங்கள்.

**நீதி - இருக்கும்போது கிடைக்காத அன்பு காலம் கடந்த பின் பயனற்றது. (இருக்கும்போது கிடைக்காதது இல்லாத போது எதற்கு)**

## ஏழ்மை - தாய் - அவள்

*சோவென மழை பொழிய!*
*சொட்டு சொட்டா நீர் ஒழுக!*
*என் மேல அது பட...*
*நீ என்னவெல்லாம் செய்திருப்பா!*
*கையத்தான் பொத்தினியோ!*
*போர்வையால போர்த்தினியோ!*
*ஏன் இறைவா இப்படி என்று...*
*இறைவனை அழைத்தாயோ!*
*ஆசை மகள் அழகா தூங்க*
*அடுக்கு மெத்தை இங்கில்லை!*
*தோசை ஒன்று நான் வாங்க..*
*ஐந்து சத காசில்லை...*
*பால் கேட்டு நா கதற...*
*அத பார்த்து நீ பதற...*
*வாசலிலே நின்றிருந்தாயோ!*
*யாரையுமே காணலையே ! என்றாயே...*
*பிஞ்சு முகம் என் சிரிப்பு...*
*நீ கண்டு மகிழ் கொள்ள...*
*அயராது உழைத்தாயே!*
*காலம் பதில் சொல்லும் என்று...*
*விடிவிற்காக காத்திருக்கிறேன் என்றாயே!*
*"ஒரு மகளாய் உன்னை காப்பேன்*
*நாள் தவறாது!"*

**- S.A.Fathima Amaniya -**



## வீரன்

வீழ்ந்தாலும் எழுந்து களத்தில்

வீறுநடை போடுபவனே

விடா முயற்சியினாலே

விண்ணை தொடுபவனே

தலைமைத்துவம் உடையவனே

தன்னம்பிக்கை கொண்டவனே

தரணியிலே உயர்ந்திடும்

தங்கத் தலைவனே

உடல் பலம் உடையவனே

உள ஆரோக்கியம் உள்ளவனே

உயர்வான உன் உழைப்பை

உணர்ந்திடுமே இந்த உலகு

வெற்றி தோல்வி சகிப்பவனே

வெள்ளை உள்ளம் கொண்டவனே

வெற்றிக்கின்னத்தை பெறுவது போல்

வெகுமதி அவனுக்கு வேறொன்றுமில்லை...

**- நிதுஷா பத்மநாதன் -**

## மாற்றம்

**அடை மழையென**
**கொட்டி தீர்த்த**
**நேசங்கள் எல்லாம்**

**சில நேரத்தில்**
**மழை பெய்த தடமேயின்றி**
**வறண்ட பூமியாய்**
**காட்சி அளிக்கிறது..**

**தொலைந்து போன நேசங்கள்**
**தொலைந்து போனதாகவே**
**இருக்கட்டும்**

**அவை இப்போ**
**எந்த நிலத்தில் மழையை**
**கொட்டி தீர்க்கிறதெனும்**
**ஆராய்ச்சி எல்லாம்**
**தேவையற்ற கவலைகள்...**

**கால மாற்றத்தில்**
**எல்லாம் எல்லோரும்**
**கலைந்து காணாமல் போகும்**
**மழை மேகங்கள் தானே...!!**

**- பூர்வாகரன் யமுனா -**

# சமூக ஊடகங்களும் மனநலமும்

- Gajooran.G -

இன்றைய எண்மிய (Digital) யுகத்தில், சமூக ஊடகங்கள் நம் அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. Facebook, Instagram மற்றும் Twitter போன்ற தளங்கள் உலகெங்கிலும் உள்ள மக்களை இணைக்கின்றன, தொடர்பு, தகவல் பகிர்வு மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றை செயல்படுத்துகின்றன. இருப்பினும், மனநலம் தொடர்பில் சமூக ஊடகங்களின் வளர்ந்து வரும் செல்வாக்கு பரவலான விவாதத்தைத் தூண்டியுள்ளது. அதன் உளவியல் விளைவுகள் பற்றிய கவலைகளையும் விழிப்புணர்வையும் உருவாக்குகின்றது.




சமூக ஊடகங்கள் மன ஆரோக்கியத்தை பாதிக்கும் முதன்மை வழிகளில் ஒன்று "ஒப்பீடு" ஆகும். பயனர்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கையின் மிகவும் நேர்மறையான அம்சங்களை மட்டுமே வெளிப்படுத்துகிறார்கள், இது யதார்த்தத்தினைப் பிரதிபலிப்பதில்லை. இந்த செயற்கைத்தனமான சித்தரிப்புகளை தொடர்ந்து வெளிப்படுத்துவதானது போதாமை, குறைந்த சுயமரியாதை மற்றும் மனச்சோர்வு போன்ற உணர்வுகளை பார்வையாளர் மத்தியில் தூண்டும். மக்கள் தங்கள் நிஜ வாழ்க்கையை நிகழ்நிலையில் பார்க்கும் சித்தரிக்கப்பட்ட உள்ளடக்கத்துடன் ஒப்பிடத் தொடங்கலாம், இது கவலை மற்றும் தோல்வி உணர்வுக்கு வழிவகுக்கும்.

மேலும், சமூக ஊடகங்கள் போதை போன்ற நடத்தைகளுக்கு பங்களிக்க முடியும். பல பயனர்கள் தங்கள் ஊட்டங்களை கவனமில்லாமல் வெளிப்படுத்துவதாலும் பின்தொடர்வதாலும் நேரத்தை இழக்கிறார்கள். இந்த கட்டாயப் பயன்பாடு விருப்பங்கள், கருத்துகள் மற்றும் பகிர்வுகளைப் பெறுவதோடு தொடர்புடைய தளங்கள் அவசரத்தால் இயக்கப்படுகிறது. காலப்போக்கில், சமூக சரிபார்ப்புக்கான இந்த தேவை சார்புநிலையை விளைவிக்கலாம், நேருக்கு நேர் தொடர்புகளை குறைக்கலாம் மற்றும் தனிமை உணர்வுகளை ஆழப்படுத்தலாம்.

இணைய ஈர்ப்பு (Cyberbullying) என்பது சமூக ஊடக பயன்பாட்டுடன் இணைக்கப்பட்ட மற்றொரு தீவிரமான பிரச்சினையாகும். இணையத்தில் அநாமதேயமானது, துன்புறுத்தல் மற்றும் தொடர்ச்சியாக பின்தொடர்தல் போன்ற தீங்கான நடத்தைகளில் ஈடுபடுவதற்கு தனிநபர்களை ஊக்குவிக்கும். இணைய ஈர்ப்பால் பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி மன அழுத்தம், பதட்டம் மற்றும் தற்கொலை எண்ணங்கள் போன்றவற்றின் உயர்நிலைகளை அனுபவிக்கின்றனர். பாரம்பரிய கொடுமைப்படுத்துதல் போலல்லாமல், இணையத் துன்புறுத்தல் இடைவிடாது, தனிநபர்களை அவர்களின் வீடுகளின் அந்தரங்கத்தையே கேள்விக்குறியாக்குகின்றது.

நேர்மறையான பக்கத்தில், சமூக ஊடகங்கள் ஆதரவான சமூகங்களுக்கு அணுகலை வழங்குவதன் மூலம் மனநல விழிப்

புணர்வை ஊக்குவிக்க முடியும். நிகழ்நிலை தளங்கள் மக்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஆலோசனை பெறவும், இதே போன்ற சவால்களை எதிர்கொள்ளும் மற்றவர்களிடமிருந்து ஊக்கத்தைக் கண்டறியவும் இடங்களை வழங்குகின்றன. மனநல அமைப்புகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வைப் பரப்பவும், களங்கத்தை எதிர்த்துப் போராடவும், மதிப்புமிக்க வளங்களை வழங்கவும் பயன்படுத்துகின்றன.

இருப்பினும், சமூக ஊடக பயன்பாட்டை சமநிலைப்படுத்துவது முக்கியமானது. திரை நேரத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் இணைய இணைப்பற்ற செயல்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற எல்லைகளை அமைப்பது அதன் எதிர்மறை விளைவுகளை குறைக்கலாம். எண்மிய தவிர்ப்பு பயிற்சி மற்றும் நிஜ வாழ்க்கை உறவுகளை வளர்ப்பது மன நலனை பராமரிக்க உதவும். சமூக ஊடகங்கள் தங்கள் மன ஆரோக்கியத்தை பாதிக்கும்போது பயனர்களை அடையாளம் காணவும், அதை நிவர்த்தி செய்வதற்கு முன்முயற்சியான நடவடிக்கைகளை எடுக்கவும் நினைவாற்றல் மற்றும் சுய விழிப்புணர்வு பயனர்களுக்கு உதவும்.

எனவே, சமூக ஊடகங்கள் நாம் எவ்வாறு இணைக்கிறோம் மற்றும் தொடர்பு கொள்கிறோம் என்பதை மாற்றியமைத்தாலும், மன ஆரோக்கியத்தில் அதன் தாக்கத்தை கவனிக்க முடியாது. இந்த தளங்களை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் மற்றும் ஆரோக்கியமான நிகழ்நிலைப் பழக்கவழக்கங்களை ஊக்குவிப்பதன் மூலமும், சமூக ஊடகங்களின் உளவியல் அபாயங்களைக் குறைப்பதன் மூலமும் அதன் நன்மைகளைப் பயன்படுத்தலாம். ஒரு சமநிலையான அணுகுமுறை சமூக ஊடகங்கள் மன உளைச்சலுக்கு ஆதாரமாக இல்லாமல் நேர்மறையான ஈடுபாட்டிற்கான ஒரு கருவியாக செயல்படுவதை உறுதி செய்ய முடியும்.

# மனவெழுச்சிசார் நுண்ணறிவும் கல்வியும்

- W.Sharmila Nazrin -




மனவெழுச்சிசார் நுண்ணறிவு (Emotional Intelligence) என்பது தனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள உணர்ச்சிகளை அடையாளம் காணவும், புரிந்துகொள்ளவும், நிர்வகிக்கவும் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் திறனையும் குறிக்கின்றது. கல்வியின் சூழலில், கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவங்களை வடிவமைப்பதில் EI முக்கிய பங்கு வகிக்கிறது. பாடசாலைகள் கல்வியில் சிறந்து விளங்குவதோடு மட்டுமல்லாமல் மாணவர் களின் முழுமையான வளர்ச்சியிலும் கவனம் செலுத்துவதால், EI நவீன கல்வியின் முக்கிய அங்கமாக உருவெடுத்துள்ளது.

கல்வியில் EI இன்றியமையாத முக்கிய காரணங்களில் ஒன்றாக ஆசிரியர்களின் தொழில்முறை செயல்திறனில் அதன்

தாக்கம் முக்கியம் பெறுகின்றது. உயர் EI உடைய ஆசிரியர்கள், சவாலான சூழ்நிலைகளுக்கு நிதானமாக பதிலளிப்பதன் மூலம், ஒரு நேர்மறையான கற்றல் சூழலை வளர்ப்பதன் மூலம் வகுப்பறை இயக்கவியலை மிகவும் திறம்பட நிர்வகிக்க முடியும். மாணவர்கள் மனவெழுச்சி சார்ந்து போராடும்போது அவர்களை அடையாளம் கண்டு தகுந்த ஆதரவை வழங்க முடியும். இந்த EI ஆசிரியர்-மாணவர் உறவுகளை வலுப்படுத்துகிறது மற்றும் ஆதரவான வகுப்பறை சூழ்நிலையை ஊக்குவிக்கிறது.

மாணவர்களுக்கு, மனவெழுச்சிசார் நுண்ணறிவை வளர்ப்பது சமமாக முக்கியமானது. வலுவான EI திறன்களைக் கொண்ட கற்றவர்கள் மன அழுத்தத்தை நிர்வகிப்பதற்கும், முரன்பாடு களைக் கையாளுவதற்கும், சமூக தொடர்புகளுக்குச் செல்வ தற்கும் சிறப்பாகப் பொருத்தப்பாட்டுடன் காணப்படுவர். கல்வி மற்றும் தனிப்பட்ட சவால்களை எதிர்கொள்வதில் அவர்கள் மிகவும் நெகிழ்ச்சியடைந்து, கல்வி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் சிறப்பாக செயல்பட உதவுகிறார்கள். EI மாணவர்கள் பச்சாதா பத்தை வளர்க்க உதவுகிறது, மற்றவர்களின் முன்னோக்குகளைப் புரிந்துகொள்ளவும் மதிக்கவும் அனுமதிக்கிறது, இது உட்படுத்தல் கற்றல் சூழலை உருவாக்குவதற்கு அவசியம்.

மேலும், பாடசாலை பாடத்திட்டத்தில் மனவெழுச்சிசார் நுண்ணறிவை ஒருங்கிணைப்பது குறிப்பிடத்தக்க நடத்தை மேம்பா டுகளுக்கு வழிவகுக்கும். சமூக மற்றும் மனவெழுச்சிக் கற்றல் திட்டங்கள் மாணவர்களுக்கு மனவெழுச்சிக் கட்டுப்பாடு, செயலில் கேட்பது மற்றும் சிக்கலைத் தீர்ப்பது போன்ற திறன்களைக் கற்பிக்கின்றன. நன்கு செயல்படுத்தப்பட்ட திட்டங்களைக் கொண்ட பாடசாலைகள் தண்டனைகளற்ற, மேம்பட்ட மாணவர் நடத்தை மற்றும் உயர் கல்வி சாதனைகள் ஆகியவற்றைக் காண்கின்றன என்று ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. ஆசிரியர்களின் EI மாணவர்களை திறம்பட ஈடுபடுத்தும் திறனையும் பாதிக்கிறது. மாணவர்க ளுடன் உணர்வுபூர்வமாக தொடர்பு கொள்ளக்கூடிய ஆசிரியர்கள், கற்றலை சுவாரஸ்யமாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கும் வாய்ப்பு அதிகம். மனவெழுச்சிக் கட்டுப்பாடு மற்றும் பச்சாதாபத்தை மாதிரியாக் குவதன் மூலம், ஆசிரியர்கள் மாணவர்கள் பின்பற்றக்கூடிய மதிப்புமிக்க வாழ்க்கைத் திறன்களை வெளிப்படுத்துகிறார்கள். இது வகுப்பறையில் பரஸ்பர மரியாதை மற்றும் புரிதல் கலாச்சாரத்தை உருவாக்குகிறது.

இருப்பினும், கல்வியில் மனவெழுசார் நுண்ணறிவை வளர்ப்ப தற்கு பாடசாலைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. பாடசாலைகள் ஆசிரியர்களுக்கு EI குறித்த வான்மை விருத்திச் செயலமர்வுகளை வழங்கலாம், உணர்வுபூர்வமாக ஆதரவளிக்கும் வகுப்பறைகளை உருவாக்குவ தற்கான உத்திகளை அவர்களுக்கு வழங்கலாம். பிரதிபலிப்பு இதழ், குழு விவாதங்கள் மற்றும் பங்கு வகிக்கும் பயிற்சிகள் போன்ற உணர்வுபூர்வமான விழிப்புணர்வை ஊக்குவிக்கும் செயல் பாடுகளை ஆசிரியர்கள் இணைக்கலாம். திறந்த தொடர்பை ஊக்குவிப்பதன் மூலமும், அன்றாட தொடர்புகளின் மூலம் பச்சாதாபத்தை கற்பிப்பதன் மூலமும் பெற்றோர்கள் வீட்டில் உணர்ச்சிகரமான கற்றலை வலுப்படுத்தலாம்.

எனவே, EI ஒரு வெற்றிகரமான கல்வி முறையின் மூலக்கல் லாகும். மெவெழுச்சிகளை நிர்வகிப்பதற்கும், வலுவான உறவு களை உருவாக்குவதற்கும் மற்றும் பொறுப்பான முடிவுகளை எடுப்பதற்கும் திறன் கொண்ட ஒரு நபரை இது வளர்க்கிறது. கல்வியில் EI க்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், பாடசாலைகள் கல்வியில் திறமையான மாணவர்களை மட்டுமல்ல, நவீன உல கின் சிக்கல்களுக்குத் தயாராக இருக்கும் மனவெழுச்சி ரீதியாக நெகிழ்வான நபர்களையும் வளர்க்க முடியும்.

# யார் ராஜா?

ஓர் காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அக்காட்டில் வாழும் ஓர் நரி ஏனைய மிருகங்கள் உண்டபின்விடும் மிச்சத்தை உணவாக உண்டு வாழ்ந்து வந்தது.

ஒருநாள், நரிக்கு எந்த உணவும் கிடைக்கவில்லை. பசியுடன் சென்றபோது எதிரில் ஓர் சிங்கத்தைக் கண்டது. உடனே நரி தனது தந்திர புத்தியால் சிங்கத்தை ஏனை மிருகங்களுடன் சண்டையிடச் செய்து அதில் இறக்கும் மிருகத்தை உண்ண எண்ணியது. எனவே நரி, சிங்கத்திடம் சென்று "இந்தக் காட்டுக்கு நீங்கதான் ராஜா. ஆனால் ஏனைய மிருகங்கள் உங்களை மதிப்பதில்லை. எனவே, நீங்கள்தான் இந்தக் காட்டின் ராஜாவா என்பது சந்தேகமாக உள்ளது" என்றது.



உடனே கோபப்பட்ட சிங்கம் "நான்தான் ராஜா என்பதை இப் போதே நிரூபிக்கின்றேன்" எனக் கூறி, சிறிது தூரத்திலிருந்த மானிடம் "இந்தக் காட்டிற்கு யார் ராஜா?" எனக் கேட்டது. உடனே மான் "நீங்கதான்" என்றது.

பின்னர் சிங்கம் சிறிது தூரம் சென்று அங்கிருந்த ஓநாயிடம் "இந்தக் காட்டிற்கு யார் ராஜா?" எனக் கேட்டது. உடனே ஓநாய் "நீங்கதான்" என்றது.

நரியைப் பார்த்து சிரித்த சிங்கம் சிறிது தூரம் சென்று அங்கிருந்த காட்டெருமையிடம் "இந்தக் காட்டிற்கு யார் ராஜா?" எனக் கேட்டது. உடனே காட்டெருமை "நீங்கதான்" என்றது.

இவ்வாறு ஒவ்வொரு மிருகத்திடமும் கேட்டு கர்வம் கொண்ட சிங்கம் இறுதியாக யானையைக் கண்டது. உடனே அதனிடம் சென்று "இந்தக் காட்டிற்கு யார் ராஜா?" எனக் கேட்டது. யானை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு இலைகளை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. எனவே சிங்கம் மீண்டும் "இந்தக் காட்டிற்கு



யார் ராஜா?" எனக் கேட்டது. அப்போதும் யானை அதனை கருத்திலெடுகாது சாப்பிட்டுக் கொண்டிருந்தது. எனவே கடும் கோபங்கொண்ட சிங்கம் யானை யை நெருங்கி "இந்தக் காட்டிற்கு யார் ராஜா என்று சொல்லப் போகிறாயா இல்லையா?" என உறுக்கிக் கேட்டது. உடனே யானை தாது தும்பிக்கையைச் சுழற்றி சிங்கத்தை ஒரு அடி அடி த்தது. அதனைக்கண்ட நரி ஓட்டம்பிடித்தது.

தூரத்தில் போய் விழுந்த சிங்கம் எழுந்திருக்க இயலாது தழ்ழாடியபடி நின்று யானையைப் பார்த்துக் கூறியது "தெரியாவிட்டால் தெரியாது எனக் கூறவேண்டியதுதானே... இப்படியா அடிப்பது...?"

மற்றையவர்களின் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு செயற்படாது தனது சுயபுத்தியில் தனது பலம், பலவீனம் மற்றும் சூழ்நிலை என்பவற்றை அறிந்து செயற்படுபவனே ராஜா!



# எண்மக் கற்றல் (Digital Learning)

- Gajooran.G -



எண்மக் கற்றல் கல்விப் பரப்பில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது, அறிவை அணுகக்கூடியதாகவும், ஊடாடக்கூடியதாகவும், தனிப்பயனாக்கவும் செய்கிறது. தொழில்நுட்பத்தில் விரைவான முன்னேற்றங்களுடன், பாரம்பரிய வகுப்பறை அடிப்படையிலான கற்பித்தல் மிகவும் ஆற்றல்மிக்க மற்றும் ஈர்க்கக்கூடிய கற்றல் சூழலாக உருவாகியுள்ளது.

## எண்மக் கற்றல் என்றால் என்ன?

எண்மக் கற்றல் என்பது கற்றலை எளிதாக்குவதற்கு எண்மக் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதைக் குறிக்கிறது. இது நிகழ்நிலைப் படிப்புகள், மெய்நிகர் வகுப்பறைகள், கல்விப் பயன்பாடுகள் மற்றும் இலத்திரனியல் புத்தகங்கள், வீடியோக்கள் மற்றும் ஊடாடும் உருவகப்படுத்துதல்கள் போன்ற எண்மிய ஆதாரங்களை உள்ளடக்கியது. இந்தக் கற்றல் முறை பௌதீக வகுப்பறைக்கு அப்பால் விரிவடைந்து, மாணவர்கள் எப்போது வேண்டுமானாலும் எங்கும் கல்வி உள்ளடக்கத்தை அணுக உதவுகிறது.

## எண்மக் கற்றலின் நன்மைகள்

எண்மக் கற்றலின் முதன்மை நன்மைகளில் ஒன்று நெகிழ்வுத்தன்மை. மாணவர்கள் தங்கள் சொந்த வேகத்தில் கற்றுக்கொள்ளலாம், சிக்கலான தலைப்புகளை மறுபரிசீலனை செய்யலாம் அல்லது பரீட்சையமான விடயம் மூலம் விரைவாக முன்னேறலாம். தனிப்பட்ட கற்றல் பாணிகள் மற்றும் செயல்திறன் அளவீடுகளின் அடிப்படையில் உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதன் மூலம் எண்மத் தளங்கள் தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்களை வழங்குகின்றன.

அணுகல் மற்றொரு குறிப்பிடத்தக்க நன்மை. தொலைதூர அல்லது பின்தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்கள் உயர்தர கல்வி உள்ளடக்கத்தை அணுகலாம், கல்வி இடைவெளியைக் குறைக்கலாம். எண்மக் கற்றல் நிகழ்நிலை கலந்துரையாடல் மன்றங்கள், குழு திட்டங்கள் மற்றும் மெய்நிகர் ஆய்வுக் குழுக்கள் மூலம் ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

மேலும், எண்மக் கருவிகள் ஈடுபாட்டை மேம்படுத்துகின்றன. ஊடாடும் உருவகப்படுத்துதல்கள், விளையாட்டுமறைக் கற்றல் அனுபவங்கள் மற்றும் பல்லூடக உள்ளடக்கம் ஆகியவை கற்றலை மிகவும் ஈடுபாட்டுடனும் சுவாரஸ்யமாகவும் ஆக்குகின்றன. ஆசிரியர்களுக்கு, எண்மியத் தளங்கள் தரப்படுத்தல் மற்றும் வருகை கண்காணிப்பு போன்ற நிர்வாகப் பணிகளை எளிதாக்குகின்றன, மேலும் அவர்கள் கற்பித்தலில் அதிக கவனம் செலுத்த அனுமதிக்கிறது.

## எண்மக் கற்றலின் சவால்கள்

எண்மக் கற்றலில் நன்மைகள் இருந்தபோதிலும், எண்மக் கற்றல் சவால்களையும் கொண்டுள்ளது. ஒரு முக்கிய சவாலாக

எண்மப் பிளவு. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேவையான சாதனங்கள் மற்றும் இணைய இணைப்புக்கான அணுகல் இல்லாமல் இருக்கலாம், எண்மக் கற்றலில் அவர்களின் பங்கேற்பைக் கட்டுப்படுத்துகிறது.

மென்பொருள் பிரச்சினைகள், வழங்கி செயலிழப்புகள் மற்றும் இணக்கத்தன்மை சிக்கல்கள் போன்ற தொழில்நுட்ப சிக்கல்கள் கற்றலை சீர்குலைக்கும். கூடுதலாக, எண்மக் கற்றலுக்கு சுய-ஒழுக்கம் மற்றும் நேர மேலாண்மை திறன்கள் தேவை, சில மாணவர்கள் சரியான வழிகாட்டுதலின்றிப் போராடலாம்.


மற்றொரு சவால், நேருக்கு நேர் தொடர்பு இல்லாதது. மெய்நிகர் தளங்கள் தகவல்தொடர்பு கருவிகளை வழங்கினாலும், அவை இயற்பியல் வகுப்பறையின் சமூக அனுபவத்தை முழுமையாகப் பிரதிபலிக்க முடியாது. இது மாணவர்களின் சமூக திறன்கள் மற்றும் மனவெழுச்சி வளர்ச்சியை பாதிக்கலாம்.

## எண்மக் கற்றலின் எதிர்காலம்

எண்மக் கற்றலின் எதிர்காலம் நம்பிக்கைக்குரியதாக இருக்கிறது, தொடர்ச்சியான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அதன் பாதையை வடிவமைக்கின்றன. செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் என்பன கற்றல் அனுபவங்களை மேலும் தனிப்பயனாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மெய்நிகர் மற்றும் யதார்த்தச் சூழல் அதிவேக கற்றல் சூழல்களை உருவாக்கி, சிக்கலான கருத்துகளை எளிதாக புரிந்து கொள்ளச் செய்யும்.

கலவைக் கற்றல் மாதிரிகள், எண்மிய மற்றும் நேரிடையான அறிவுறுத்தல்களை இணைத்து, விதிமுறையாக மாற வாய்ப்புள்ளது. இந்த மாதிரிகள் இரு உலகங்களிலும் சிறந்தவை நெகிழ்வுத்தன்மை மற்றும் எண்மியத் தளங்களில் இருந்து தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் பாரம்பரிய வகுப்பறைகளில் இருந்து அனுபவங்களை வழங்குகின்றன.

எனவே, எண்மக் கற்றல் நவீன கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது, மாணவர்கள் எவ்வாறு கற்கிறார்கள் மற்றும் ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள் என்பதை மாற்றுகிறது. எண்ம பிளவு மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் போன்ற சவால்கள் நீடித்தாலும், கல்வியை மேம்படுத்த எண்மக் கற்றலின் சாத்தியம் மறுக்க முடியாதது. இந்த சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், புதுமையான தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலமும், கல்வி நிறுவனங்கள் எதிர்கால சந்ததியினருக்கு மேலும் உள்ளடக்கல், ஈடுபாடு மற்றும் பயனுள்ள கற்றல் சூழலை உருவாக்க முடியும்.



# உன்னையே நீ அறிவாய்



கி.மு.469 ல் கிரேக்க நாட்டில் ஓர் ஏழைச் சிற்பியின் மகனாகப் பிறந்தவர் சாக்ரட்டீஸ்.

“நீ யார்?, எதற்காக வந்திருக்கிறாய்? என்ன செய்யப்போகிறாய்? என்பதை முதலில் தெளிவாக அறிந்துகொள், பின், அதன்படி நட!” என்றார் அவருடைய அப்பா. தனது நாற்பதாவது வயதுவரை ஒதுங்கி இருந்த சாக்ரட்டீஸ்அதன் பின்பு தன் எண்ணங்களை தைரியமாக, பேசத்தொடங்கினார்.

கடவுளை அவர் மறுக்கவில்லை, ஆனாலும் கடவுள் பெயரால் நடைபெறும் முட்டாள்தனங்களை எதிர்த்தார். உருண்டையான சப்பை மூக்கு, பிதுங்கி நின்ற கண்கள், குட்டையான உருவம், அசிங்கமான தோற்றம், இதுதான் சாக் ரட்டீஸ். ஆனாலும் அவர் பேச்சைக் கேட்க இளைஞர்கள் கூட்டமாக வந்தார்கள்.

எழுபதாவது வயதில் இளைஞர்களைக் கெடுக்கப் பார்க்கிறார் எனும்குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டது. “மன்னிப்பு கேட்டால் உயிர் பிழைக்கலாம்” என நீதிபதிகள் சொன்ன போதும் “உயிரை விட என்னுடைய கருத்துக்கள் உயர்ந்தவை” என்று உயிர்விட தயாரானார்.

மரணத்தேதி குறித்த அந்தக் குறிப்பிட்ட நாளும் வந்தது.

“நீங்கள் வாழ்வதற்கு தயாராகுங்கள் நான் விடை பெறுகிறேன்” எனச் சுற்றி நின்ற, சீடர்களைப் பார்த்து புன்னகைத்து விட்டு மகிழ்ச்சி குறையாமல் தனக்கான நஞ்சுக் கோப்பையை வாங்கிக் கொண்டார் சாக்ரட்டீஸ். “நஞ்சினை இப்பொழுதே குடிக்க வேண்டாம் சற்று நேரம் கழித்து குடிக்கலாம்” என சீடர்கள் சொல்ல “காலம் தாழ்த்துவதால் நீங்கள் வீடு திரும்ப நேரமாகலாம்” எனக்கூறி விஷத்தை ஒரு சொட்டுக் கூட மிச்சம் வைக்காமல் குடித்து முடித்தார்.

“உங்கள் இறுதிச்சடங்கு எப்படி அமைய வேண்டும்?” என சீடர்கள் கேட்டனர்.

“மரணத்துக்குப் பின் என்னை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது, என் உடலை என்ன செய்தாலும் எந்தப் பயனும் இல்லை” எனக்கூறி விடைபெற்றார் சாக்ரட்டீஸ்.

அந்த மாமனிதன் நமக்காக செய்த உபதேசம் என்ன தெரியுமா?

“உன்னையே நீ அறிவாய்”

“நண்பர்களே! உண்மையான அறிவு என்ன தெரியுமா? தன்னை அறிவது தான்.” தன்னை அறிந்தால் மட்டுமே சுற்றி உள்ள உண்மைகளை உள்ளது உள்ளபடி அறிய முடியும். வாழ்வை வெல்லமுடியும்.

- நன்றி யோகஷிவா –

# தன் வினை தன்னைச்சுடும்...

- A.J.Jena -

ஒரு கிராமத்தில் கந்தசாமி என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் வீட்டுத் தோட்டத்தில் ஒரு முருங்கை மரம் இருந்தது.

வாரம் ஒரு முறை முருங்கை காய்களை பறித்து பையில் நிரப்பி தோளில் வைத்துக் கொண்டு ஒன்பது கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கும் நகரச் சந்தை வரை நடந்து சென்று வழக்கமாக ஒரு மளிகைக் கடையில் விற்று விட்டு வருவது வழக்கம்.




முருங்கைக் காயைக் கொடுத்து விட்டு அதற்கு பதிலாக அரிசி, பருப்பு, சீனி போன்ற வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி வருவார்.

கந்தசாமி கொண்டு வரும் முருங்கைக்காயின் சுவை அந்த பகுதி மக்களிடையே மிகவும் பிரபலம்.

இதை பயன்படுத்தி மற்ற முருங்கைக்காயோடு கலந்து மளிகை கடைக்காரரும் நல்ல லாபம் சம்பாதித்து விடுவார்.

பல வருடமாக கந்தசாமி முருங்கைக்காய் கொண்டு வருவதால் மளிகை கடைக்காரர் அதை எடை போட்டு பார்த்ததில்லை.

கந்தசாமி சொல்கின்ற எடையை அப்படியே நம்பி அதற்கு ஈடான மளிகை பொருட்களை கொடுத்து அனுப்புவார்.

காரணம் கந்தசாமியின் நேர்மையும் நாணயமும் எல்லோரும் அறிந்தது!

ஒரு நாள் கந்தசாமி பத்து கிலோ முருங்கைக்காயை கொடுத்துவிட்டு அதற்கான பொருட்களை வாங்கிச்சென்றார்....

சிறிது நேரத்தில்....

பத்து கிலோ முருங்கைக்காய் மொத்தமாய் வேண்டும் என்று ஒரு சமையல்காரர் வந்து கேட்க... அவருக்காக மளிகைக்காரர்... எடைபோட... அதில் ஒன்பது கிலோ மட்டுமே இருந்தது.

அன்று முழுவதும் மளிகைகாரருக்கு தூக்கமே வரவில்லை. கந்தசாமி மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தோம், இவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகத்தை செய்துவிட்டாரே!

இத்தனை வருடங்களுக்காக இப்படி முட்டாள் தனமாக எடை குறைவான முருங்கைக்காயை வாங்கி ஏமாந்து விட்டோமே!

அடுத்த முறை கந்தசாமி வந்தால் சும்மா விடக்கூடாது என்று கடுங்கோபத்தில் இருந்தார்!

நான்கு நாட்கள் கழித்து கந்தசாமி மிகவும் சந்தோஷமாக வந்தார்!

நல்ல விளைச்சல் என்பதால் நிறைய கொண்டு வந்திருந்தார்.

‘கையும் களவுமாக பிடிக்கவேண்டும் என்று, எத்தனை கிலோ

என்று மளிகைக்காரர் கேட்க ஒரு கட்டு பத்து கிலோ என்றார் கந்தசாமி...

அவர் முன்னாலேயே எடைபோட்டு பார்க்க ஒவ்வொரு கட்டிலும் ஒன்பது கிலோ தான் இருந்தது.

வந்த கோபத்தில் மளிகைக்காரர் பளார், பளார் என கந்தசாமியின் கன்னத்தில் அறைந்தார்!

‘இத்தனை வருஷமா இப்படித் தான் ஏமாத்திட்டு இருக்கியா? கிராமத்துக்காரங்க ஏமாத்த மாட்டாங்கன்னு நம்பி தானே எடை போடாம அப்படியே வாங்கினேன், இப்படி துரோகம் பண்ணிட்டியே சீய்...’ என துப்ப, நிலைகுலைந்து போனார் கந்தசாமி.

அய்யா... என்ன மன்னிச்சிடுங்க நான் ரொம்ப ஏழை, எடைக்கல்லு வாங்குற அளவுக்கு என்கிட்ட காசு இல்லீங்க...

ஒவ்வொரு முறையும் நீங்க கொடுக்கிற ஒரு கிலோ பருப்பை ஒரு தட்டுலயும், இன்னொரு தட்டுல முருங்கைக்காயையும் வச்சி தான் எடைபோட்டு கொண்டு வருவேன்.

‘இதை தவிர வேற எதுவும் தெரியாதுங்கய்யா, என்று காலை பிடித்து அழ,

மளிகைக்காரருக்கு செருப்பால் அடித்தது போல் இருந்தது... தான் செய்த துரோகம் தனக்கே வந்ததை உணர்ந்தார்.

இத்தனை வருடங்களாக கந்தசாமி யை ஏமாற்ற நினைத்த மளிகைக்காரரும்...

அவருக்கே தெரியாமல் ஏமாந்து கொண்டு தான் இருந்திருக்கிறார் என்பது தெளிவானது!!

இது தான் உலகநியதி !!

*நாம் எதைத் தருகிறோமோ, அதுதான் நமக்குத் திரும்ப வரும்...*


*நல்லதை தந்தால் நல்லது வரும்..., தீமையை தந்தால் தீமை வரும்! வருகின்ற காலங்கள் வேண்டுமானால் தாமதமாகலாம், ஆனா... நிச்சயம் வரும் !!*

*ஆகவே நல்லதை மட்டுமே தருவோம், நல்லதை மட்டுமே விதைப்போம் !!*

*மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். இதனை எப்போதும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்...*



# பேசும் படங்கள்




Art By. M.J.F. Nasma




Art By. M.R.P. Shakira

# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...**

**"குருசேத்திரம்" மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**

- சிறுகதை
- தொடர்கதை
- கட்டுரை
- கவிதை
- ஓவியங்கள்

**தங்களின் ஆக்கங்கள் இரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது.**

**சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உசாத்துணை / பெற்ற மூலம் குறிப்பிடவும்.**

**சிறந்த ஆக்கங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் (நிபந்தனைகளுக்குட்பட்டது)**

## குருசேத்திரம் உங்களின் களம்...

**அனைவரும் ஆக்கங்களை ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன்னர் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

guruseththiram@gmail.com

www.guruseththiram.blogspot.com

– குருசேத்திரம் குழுமம் –